# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2332/42 - 2023 මැයි මස 19 වැනි සිකුරාදා - 2023.05.19**

2332/42 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KDS/HAR/4/2/1/51.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2017/WS/589.

2022, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி இல. 2299/10 கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்ட 07 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்த வேண்டும். மேலும் 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரம் 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு எனத் திருத்தப் படல் வேண்டும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

மொஹான் தர்மதாச,
பிரதேச செயலாளர்,
ஹாரிஸ்பத்துவ.

பிரதேச செயலகம்,
ஹாரிஸ்பத்துவ,
குருநாகல் வீதி,
நுகவெல,
2023, மே 17.

EOG 05 - 0158